பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை 22.11.2024 | அதிர்வு 113

## கிருலப்பனையில் நேற்று தமிழ்ப் பெண் படுகொலை

கொழும்பு, கிருலப்பனை, கலிங்க மாவத்தை, கொலோம்தோட்டை சரசவி உயன அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது மாடியில் உள்ள வீடொன்றில் தனியாக இருந்த வயோதிபப் பெண் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## கனடாவில் கொடூரம்

# தந்தையைக் கத்தியால் குத்திக் கொன்ற மகன்!

## தமிழினப் பற்றாளர் மதி மரணம்

(வி.ரி.சகாதேவராஜா)

தந்தையை மகன் கத்தியால் குத்திக் கொலை செய்த அதிர்ச்சி தரும் துயரச் சம்பவம் கனடாவில் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது .

மகனைக் கனேடியப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த 66 வயதுடைய குலத்துங்கம் மதிசூடி என்பவரே இவ்வாறு குத்திக் கொலை செய்யப்பட்டவராவார். 04





# நாங்கள் இந்தத் தோல்விகளில் இருந்து பாடம் கற்று முன்னோக்கிச் செல்வோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபதம்

“தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குரிய அரசியல் பயணம் தொடரும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“உண்மை மற்றும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, மக்கள் ஆணையை ஏற்று, மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகப் புதிய வழியில் எமது பயணம் கூட்டுப் பொறுப்புடன் தொடரும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சம்பிரதாயக் கட்சிகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

எனவே, பின்னடைவு, தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்வோம். 04





# தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் வவுனியாவில் இன்று திறந்து வைப்பு






(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்டத் தலைமை அலுவலகம் வவுனியாவில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சரின்பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா கித்துள் வீதியில் குறித்த அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் குறித்த அலுவலகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் சத்திய பிரமாணம் செய்துகொண்ட அவர்களுக்கு வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# இடர் நிலைமையை எதிர்கொள்ள வடக்கு மாகாணம் தயார் நிலையில்






எதிர்வரும் நாட்களில் வடக்கு மாகாணத்தில் இடர் பாதிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாக துறைசார் திணைக்களத் தலைவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்தனர்.

பருவகால மழை மற்றும் இடர்தணிப்பு முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர், ”எதிர்வரும் நாள்களில் தாழமுக்கம் ஒன்று வங்கக் கடலில் உருவாகலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதன் நகர்வுப் பாதை சரியாக இன்னமும் கணிக்கப்படவில்லையாயினும், நாம் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும். பருவமழை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் – செப்டெம்பர் மாதத்துக்கு முன்னதாக, எமது பிரதேசத்திலுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் துப்பரவாக்கப்பட்டிருக்க வேண்டும். சில இடங்களில் வாய்க்கால்களைச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளனர். அவற்றை சட்ட ரீதியாக அணுகி உடனடியாக இடித்து அகற்றுங்கள். தேவையேற்படின் பொலிஸாரின் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு திணைக்களங்களும் மற்றைய திணைக்களங்களைப் பார்த்துக்கொண்டிருக்காமல் உடனடியாக இந்தப் பணிகளைச் செய்யுங்கள். மேலும் பல இடங்களில் வாய்க்கால்களுக்குள், வீதிகளில் மக்கள் குப்பைகளை வீசுகின்றார்கள். அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதுதான் வழி. பல தடவைகள் விழிப்புணர்வுகளை செயற்படுத்தியும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாவிட்டால், சட்ட நடவடிக்கை ஊடாகத் தண்டிக்க வேண்டும்.” – என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வெள்ள அபாய இடர் பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலர் இங்கு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் இடரை எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையில் இருப்பதாக மேலதிக மாவட்ட செயலர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில், மன்னார் மாவட்டமருத்துவமனையூடாகச்செல்லும் கால்வாய் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட மாவட்ட செயலர், மக்கள் இடரின்போது இடம்பெயர நேரிட்டால் அவர்களைத் தங்க வைப்பதற்குரிய நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்வாய்கள் அனைத்தும் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் சுட்டிக்காட்டினார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர், யாழ். மாவட்டத்தில் நேற்று 6 மணி நேரத்தினுள் 130 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானமையால் திடீரென வெள்ள நிலைமை ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தின் உப்பாறு மற்றும் தொண்டமனாறு நன்நீரேரிகளினதும், வழுக்கையாறினதும் வெள்ள நீரைக் கடலுக்கு வெளியேற்றும் தடுப்பணை கதவுகள் இம்முறை முன்னதாகவே திறக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் கடும் மழை எதிர்பார்க்கப்படும் நிலையில் அதைக் கருத்தில்கொண்டு அவை திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 18.3 அடியாக உள்ளது. 350 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானால் 30 அடி வரையில் நீர் மட்டம் உயர்வடையக்கூடும். இருப்பினும் நீர் வெளியேற்றும் பிரதேசத்துக்கு வாய்க்கால்களை அண்மித்து உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்றும் அவர் தெரிவித்தார்.

இடர் நிலைமை ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இரவிலும் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபையின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி குறிப்பிட்டார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான வீதிகளை ஒட்டி மக்கள் வீட்டு மதில்களை அமைத்திருப்பதன் காரணமாக, வெள்ளநீர் வழிந்தோடக்கூடிய வழிமுறைகளை உருவாக்க முடியாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக வீடுகள் மற்றும் மதில்கள் அமைப்பதற்கான அனுமதியைப் பெற்ற பின்னர் அதற்கு முரணாக அவற்றை அமைப்பதால் இந்த நிலைமை ஏற்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, அனுமதியை வழங்குவதுடன் மாத்திரமில்லாது, அவற்றை தொடர் கண்காணிப்புக்கும் உட்படுத்த வேண்டும் என்று ஆளுநர் அறிவுறுத்தினார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலர் இங்கு குறிப்பிட்டார்.

இடர் நிலைமையின்போது தீவகத்திலுள்ள நோயாளர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கான உதவிகளை கடற்படையினர் மேற்கொள்ள வேண்டும் எனவும், கடல் மார்க்கமாக பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் விமானப் படையினர் உதவ வேண்டும் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்தார்.

கடற்படையினர் தமது உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தனர்.

குறிகாட்டுவான் இறங்குதறையிலிருந்து பயணிகளை ஏற்றி இறக்கும் இரண்டு படகுகளையும் புயல் நிலைமை ஏற்பட்டால் பாதுகாத்துத் தருவதற்குக் கடற்படையினரின் உதவியை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கோரினார். அதற்கும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

கால்நடைகள் கடந்த காலத்தில் இடர் நிலைமையில் அதிகளவில் உயிரிழந்தமையைக் கருத்தில்கொண்டு, கால்நடைகளை முற்கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதற்குரிய ஒழுங்குகள் கண்டாவளை மற்றும் நானாட்டானில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வீதிகளில் குப்பை போடுபவர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் தமக்குச் சமர்ப்பித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

(நான்காம் பக்கம் பார்க்க)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தந்தையைக் கத்தியால்...

தமிழினப் பற்றாளரும் கனேடியத் தமிழ் வானொலி, பத்திரிகைத் துறையின் முன்னோடி பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார்.

அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு, கிழக்கில் வழங்கி வந்தவர். வருடமொரு முறை காரைதீவு வந்து செல்கின்றவர். அம்பாறை மாவட்டத்தில் பல சமூக செயற்பாடுகளைச் செய்தவர். அவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

அவரது மகன் இளங்கோ காதல் முறிவு காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தவர் என்று சொல்லப்படுகின்றது.

நேற்று இரவு தாயை ஒரு அறையில் பூட்டிவிட்டு தந்தையைக் கத்தியால் குத்தி கொலை செய்திருக்கின்றார் என்று அவரது சகோதரி வாக்குமூலம் அளித்துள்ளார்.

உடனடியாகக் கனடா பொலிஸார் அவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

கனேடிய ஊடகங்கள் இந்தச் செய்தியை இன்று காலை முதல் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு வருகின்றன.

















## கிருலப்பனையில்...

ஒருவர் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று கிருலப்பனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கமலா சின்னம்மா என்ற 70 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் வீட்டில் இருந்த சுமார் 8 பவுண் தங்கம் திருடப்பட்டிருப்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட வயோதிபப் பெண் தனது கணவர், மகள் மற்றும் பேத்தியுடன் அந்த வீட்டில் வசித்து வந்தார் என்றும், நேற்றுக் காலை 6.30 மணியளவில் மகள், பேத்தியைப் பாடசாலையில் இறக்கி விட்டு வேலைக்–குச் சென்றார் என்றும் தெரியவந்துள்ளது.

காலை 10 மணியளவில் மொரட்டுவை பிரதேசத்துக்கு வியாபார நிமித்தம் செல்வதாகக் கூறி கணவர் வீட்டை விட்டு வெளியேறினார் என்றும், கொலையுண்ட வயோதிபப் பெண் மாத்திரமே வீட்டில் தங்கியிருந்தார் என்றும் பொலிஸாரின் விசாரணையில் மேலும் தெரிய வந்துள்ளது.

## தோல்விகளில் இருந்து...

ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலப்பகுதிதான் ஆகின்றது. இந்தக் காலப்பகுதிக்குள் முன்னேற்றமும் உள்ளது, பின்னடைவும் உள்ளது. பலவீனங்களை இனங்கண்டு சரியான திசையில் பயணிப்பதே இராஜதந்திரம்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது அம்பலம் கிடையாது. தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் எவரும் கட்சியைப் பயன்படுத்த முடியாது.

கொள்கை அடிப்படையில் மக்கள் மற்றும் நாட்டு நலனுக்காக இணைந்து பயணிக்க முடியும்." – என்றார்.

## இடர் நிலைமையை...

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வீதிகளில் குப்பை போடுபவர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதற்குரிய வர்த்தமானி தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மாநகர சபை சார்பில் பங்கேற்ற பிரதிநிதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரையோரப் பகுதிகளில் இராணுவத்தினர் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டதாகவும், ஆனால் மக்கள் மீண்டும் மீண்டும் அங்கு குப்பைகளைப் போடுவதாகவும், இது கவலையளிப்பதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சார்பில் பங்கேற்ற பிரதிநிதி தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் குப்பைகளை அகற்றி துப்புரவான நகராக்குவதற்கான நடவடிக்கையை தாம் யாழ். மாநகர சபையுடன் இணைந்து செய்வதற்குப் பொறுப்பெடுப்பதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலர் தெரிவித்தார்

இதேவேளை, இடர் நிலைமைகளை எதிர்கொள்வதற்காக கடற்படையினரின் 16 குழுக்கள் படகுகளுடன் தயாராக இருப்பதாகவும், மேலதிகமாக தேவைப்பட்டால் அதையும் பெற்றுக் கொள்ளக் கூடிய தயார் நிலையில் தாம் இருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

எதிர்வரும் இடர் நிலைமைகளின் போது பொதுமக்கள் இடர் முகாமைத்துவப் பிரிவின் 117 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொள்ள முடியும் எனவும், அதேநேரம் யாழ். மாவட்டத்தில் 021 222 1676, 0773957894 என்ற இலக்கங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 021 228 5330, 07723 20528 என்ற இலக்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 021 229 0054 என்ற இலக்கத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் 023 211 7117 என்ற இலக்கத்துக்கும், வவுனியா மாவட்டத்தில் 0760994883 என்ற இலக்கத்துக்கும் தொடர்புகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருத்தவேலை செய்து கொண்டிருந்தவர் பாலம் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தார்!

காலி, நாகொடை பத்தேகம வீதியில் கிங் கங்கையின் குறுக்கே உள்ள இரும்புப் பாலத்தில் திருத்த வேலை செய்து கொண்டிருந்த நபரொருவர் நேற்று (21) மாலை பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

பாலத்தின் நடுவில் உள்ள கம்பிகளில் சிக்கி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாகொடை பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாகொடை பொலிஸாரும் பிரதேசவாசிகளும் தற்போது சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 500 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள் சிக்கியது!



500 கோடி ரூபாவுக்கும் அதிகளவான பெறுமதி கொண்ட 200 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் காலி மாபலகம பிரதேசத்தில் வைத்து கைப் பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேகத்தின் பேரில் 10 பேரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி மாத்தறை, கந்தர நுன்னவெல்ல பகுதிக்கு படகு மூலம் போதைப்பொருள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது.

இதன்படி, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மாபலகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு வான் ஒன்றில் போதைப்பொருள் கொண்டு வரப்பட்ட விடயத்தை அறிந்துள்ளனர்.

விசாரணையின் பின்னர், மாத்தறை, கல்கிஸ்ஸை, இரத்மலானை ஆகிய பகுதிகளில் சந்தேகத்தின் பேரில் 10 பேரை பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின் மூலம், மாபலகமவிலுள்ள வீடொன்றில் இருந்த போதைப் பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது 200 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப் பொருள் மற்றும் 70 கிலோ கிராம் ஹெராயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள் ளன.

இவற்றின் பெறுமதி 500 கோடி ரூபாவுக்கும் அதிகளவாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த போதைப் பொருள் பாகிஸ்தானில் இருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவற்றை இந்த நாட்டுக்கு அனுப்பியது யார் என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நேற்றுக் (21) காலை மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு விஜயம் செய்து போதைப் பொருள் கையிருப் பைப் பார்வையிட்டார்.

அண்மைக்கால வரலாற்றில் நிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரியளவான போதைப் பொருள் இது என்று அவர் குறிப்பிட்டார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சர்வதேச நீதிமன்ற உத்தரவு

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அதிரடி உத்தரவு ஒன்றை வெளியிட்டு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

சர்வதேச ரீதியில் பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கும் அதன் அமெரிக்கா தலைமையிலான நட்புக் கூட்டணிக்கும் தார்மீக ரீதியில் விழுந்த பெரும் அடி இந்த உத்தரவு.

இஸ்ரேல் பிரதமர், அந்நாட்டின் முன்னாள் பாதுகாப்பு துறை அமைச்சர் மற்றும் ஹமாஸ் இராணுவத் தளபதிக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகள் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு குறித்த இஸ்ரேலின் மேன்முறையீட்டை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு முன்னான ஆயம் நிராகரித்த நிலையில், இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அந்நாட்டின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோகவ் கேலண்ட் மற்றும் ஹமாஸின் இராணுவ தளபதி முகமது டெய்ப் ஆகியோருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த முடியுமா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் விசாரணை ஆயம் இஸ்ரேலின் பூர்வாங்க ஆட்சேபனை மேன்முறையீட்டை நிராகரித்த நிலையில் இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் கரீம் கான் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட நெதன்யாகு, கேலண்ட் மற்றும் டெய்ப் மற்றும் (கொல்லப்பட்ட) இரு ஹமாஸ் தலைவர்களான இஸ்மாயில் ஹனியே மற்றும் யாஹ்யா சின்வாருக்கும் எதிராக பிடியாணை பிறப்பிக்கக் கோரியிருந்தார்.

பலஸ்தீன மக்களின் யுத்த மரணங்கள் தொடர்பாக இஸ்ரேல் அளித்த விளக்கங்களை நிராகரித்த சர்வதேச நீதிமன்றம், போர் தொடர்பாக இஸ்ரேல் அரசின் அறிக்கைகளையும் நிராகரித்துள்ளது.

மேலும், மருத்துவ உதவிகளைப் புறக்கணித்து, குழந்தைகள் உட்பட பல உயிரிழப்புகளை இஸ்ரேல் ஏற்படுத்தியதாகச் சர்வதேச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இந்த அதிரடி உத்தரவு நடவடிக்கை இஸ்ரேலிய அரசாங்கத்தின் சீற்றத்தைத் தூண்டியுள்ள அதேசமயம், இஸ்ரேலின் மனித குலத்துக்கு எதிரான பேய் வெறியாட்டத்துக்குப் பின்புல ஆதரவாக நிற்கும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகுத் தரப்பிலும் குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள், குத்து வெட்டுகளுக்கு வழி செய்திருக்கின்றது.

‘சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், உத்தரவுகள் அரசியல் சார்ந்த முடிவுகள்அல்ல, அவை செயல்படுத்தப்பட வேண்டும்’- என்று ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் ஜோசப் பொரெல் கூறியிருக்கின்றார்.

நேற்று - வியாழனன்று - அம்மானில் உள்ள ஜோர்டானிய வெளியுறவு அமைச்சகத்தில் நடைபெற்ற செய்தி மாநாட்டில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கைது வாரண்டுகள் அரசியல் முடிவுகள் அல்ல, அவை மதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்று பொரெல் கூறினார்.

ஜோர்டானிய வெளியுறவு மந்திரி அய்மன் அல்-சஃபாடி, பொரலின் இந்தக் கருத்துக்களைப் பிரதிபலித்தார்.

“சர்வதேச சமூகம் சில சந்தர்ப்பங்களில் மட்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முடிவுகளை தேர்ந்தெடுத்து ஏற்றுக்கொள்வதோ, மற்றவற்றில் அவற்றை நிராகரிப்பதோ நீதியற்றது” என்று அல்-சஃபாடி கூறினார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவை ‘காசாவில் படுகொலைகளை நிறுத்தச் செய்வதற்கான’ மற்றும் ‘முற்றுகையிடப்பட்ட பகுதிக்கு நிவாரண உதவி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான’ ஒரு செய்தியாக சர்வதேச சமூகம் பார்க்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படுமா அதன் மூலம் இஸ்ரேலின் பேய் வெறியாட்டம் தடுத்து நிறுத்தப்படுமா என்பவை இனித்தான் தெரியும். ஆயினும் அமெரிக்க தலைமையிலான கூட்டணியின் ஆதரவோடு இஸ்ரேல் நடத்தும் மனித குலத்துக்கு எதிரான வெறியாட்டத்தின் தீவிரத்தை சர்வதேசம் பார்த்திருக்காது என்பதற்கான செய்தியாக இந்த உத்தரவை பார்க்க முடியும்.



# ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கல்முனையில் கைது!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருள்களை நீண்ட காலமாகச் சிறு பொதி செய்து வியாபாரம் செய்து வந்த இரண்டு சந்தேக நபர்களைக் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை (21) இரவு கல்முனை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய இருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

இதன் போது கல்முனைக்குடி 9 பிரிவு மதிரிஸா வீதியில் வசிக்கும் 26 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தை 970 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடனும் கல்முனைக்குடி 2 ஆம் பிரிவு கிறீன் பீல்ட் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபர் 870 மில்லி கிராம் போதைப் பொருளுடனும் கைதாகினர்.

கைதான 2 சந்தேக நபர்களையும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த சில தினங்களாக இந்தப் பகுதியில் ஐஸ் போதைப் பொருள்கள் அதிகளவாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வடையால் ஏற்பட்ட இருமல் உயிரையே பறித்தெடுத்தது!

வடை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, ஏற்பட்ட இருமல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அத்துருகிரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அத்துருகிரிய, பொரலுகொட வீதியை சேர்ந்த அனுர சம்பத் அமரசேகர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்தினருடன் உணவு உட்கொண்டிருந்த நிலையில் அந்த நபர் வடை சாப்பிட்டுள்ளார். இதன்போது திடீரென இருமலுடன் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.





# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று நாவலர் நினைவரங்கம்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நாவலர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் சிலை முன்றிலில் இன்று (22) வெள்ளிககிழமை காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்கள் நாவலரது வெவ்வேறு பணிகளை முன்னிலைப்படுத்தி உரையாற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கு. பாலசண்முகன் நினைவுரையாற்றினார். விஞ்ஞான நெறி ஆசிரியமாணவர் செந்தூர்ச்செல்வன் நன்றியுரையாற்றினார்.











# சந்நிதியான் ஆச்சிரம வாரந்த நிகழ்வு

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அன்ன சத்திரம் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று காலை இடம் பெற்றது.

இதில் 'அறமும் ஆண்டவனும்' என்ற ஆன்மீகத் தலைப்பில் ஆசிரியரும், அன்மீக இரைஞருமான ஸ்ரீ ஆதவன் அருளுரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலாசார பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மாட்டுடன் மோ.சைக்கிள் மோதி விபத்து; 23 வயதுடைய இளைஞன் மரணம்!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பலாந்துறை, வீரமுனை, பிரதான வீதியில் வீரமுனை நூலகத்துக்கு அண்மையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று வியாழக்கிழமை (21) இரவு 07 மணியளவில் நடைபெற்ற விபத்தில் அலவக்கரை வீதி, வீரமுனையை சேர்ந்த மதன் பவி லக்சான் (வயது 23)



என்பவரே உயி

குறித்த மோட்டார் சைக்களில் இளைஞன் வீடு திரும்பும் வழியிலேயே மாட்டுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரமுனையை சேர்ந்த மதன் பவி லக்சான் (வயது 23) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தோழர் பத்மநாபாவின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவருக்கு உபகரணம்





ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈ. பி. ஆர். எல். எப்பின் செயலாளர் நாயகம் அமரர் தோழர் பத்மநாபாவின் பிறந்த நாளை முன்னிட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் தோழமை தினம் அண்மையில் கண்டி வீதி, சாவகச்சேரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது சாவகச்சேரியில் அடிப்படை வசதிகள் குறைந்த உதயசூரியன் கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களைச் சேர்ந்த தரம் 2 முதல் தரம் 12 வரை கல்வி பயிலும் 64 மாணவர்களுக்கு தேவையான கொப்பிகள் மற்றும் புத்தக பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அமரர் தோழர் பத்மநாபாவின் கருத்துக்கள் மற்றும் நடைமுறைகளில் ஈர்ப்பும், மக்களின் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் உதவ வேண்டுமென்பதில் ஈடுபாடு கொண்ட புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வசிக்கும் றூபன் மற்றும் சுந்தர் ஆகிய இருவரதும் நிதி பங்களிப்புடன் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# மன்னார் ஆஸ்பத்திரி மரணங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்துதல் வேண்டும்!



## மஸ்தான் எம்.பி. கோரிக்கை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொது வைத்தியசாலையில் செவ்வாய்கிழமை (20) பிரசவத்தின் போது உயிரிழந்த தாய் மற்றும் சிசு தொடர்பில் உரிய விசாரணையை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். அத்துடன் மன்னார் வைத்தியசாலை தொடர்பில் அச்ச மடைந்திருக்கும் மக்களின் அச்சத்தைப் போக்கவும் நடவடிக்கை எடுக் வேண்டும்.

இவ்வாறு வன்னி எம்.பி. காதர் மஸ்தான் சம்பந்தபட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான அசாதா ரண சம்பவங்கள் தொடர்ந்தும் நடை பெறாமல் உரியவர்கள் நடவடிக்கை களை மேற்கொள்ளுவதுடன் மக்க ளுக்கு உயரியதும் பாதுகாப்பானதுமான சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் வைத்தியசாலையில் அண்மைக்காலமாக பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட தாய்மார் இறந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளமை கவலை அளிக்கிறது.

நோயாளர்கள் தங்களது மருத்துவ தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்வதற்கு அச்சமடைந்திருப்பதாகவும் அறிய முடிகிறது.

நடந்த சம்பவம் தொடர்பாகக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயத்துக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவனின் வழிகாட்டலின் கீழ் கல்லடி வேலூர் மாதர் கிராமிய அபிவிருத்தி சங்க நிதியில் மட்டக்களப்பு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தரம் 10 வகுப புக்கான அவசியமான கற்றல் உபகர ணங்கள் நேற்று வியாழக்கிழமை (21) வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எஸ்.பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வுக்குப் பிரதம அதிதியாக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வன்னிய சிங்கம் வாசுதேவன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை வடக்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், அபி விருத்தி உத்தியோகத்தர்கள், கல்லடி வேலூர் கிராம உத்தியோகத்தர், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லடி வேலூர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் , செயலாளர், பொருளாளர் மற்றும் சங்க நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.








# அடிக்கடி தடைப்பட்டுவரும் மின்சாரம்; வாகரை மக்கள் இன்று ஆர்ப்பாட்டம்!

(பழுவூரான்)

வாகரை மின்சார சபையின் அசமந்தப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமை (22) மக்கள் எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வாகரை பிரதேச செயலக பிரிவில் உள்ள வாகரை, ஊரியன் கட்டு, தட்டு முனை, கதிரவெளி உள்ளிட்ட பல கிராமங்களில் நாளாந்தம் பல மணி நேரம் முன்னறிவித்தல் எதுவுமின்றி கடந்த இரண்டு மாதங்களாக மின்வெட்டு மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் இந்த முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் உள்ளிட்ட கிராம பொது மக்களும் தமது நாளாந்தக் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். இதனையடுத்தே இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மின்சார சபையின் இச் செயற்பாட்டினால் பாடசாலை மாணவர்களின் பரீட்சை கால இரவு நேர கற்றல் நடவடிக்கை முற்றாக பாதிப்படைவதுடன் அவர்களது எதிர்காலம் பாதிப்படைய இது ஏதுவாக அமையுமென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

“துண்டிக்காதே துண்டிக்காதே முன்னறிவித்தல் இன்றி மின்சாரத்தை துண்டிக்காதே”, “மின்சார சபையே மின்சார சபையே பாடசாலை மாணவர்களின் கல்விக்கு தடையாக இருக்காதே” போன்ற வாசகங்களை பொறித்த பதாதைகளை ஏந்தியவாறு பொதுமக்கள் சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான தீர்வை பெற்றுத்தருமாறு வாகரை பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். தொடர்ந்து பிரதே செயலாளரின் வாக்குறுதியைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# மட்டக்களப்புக் கல்லடி இக்னேசியஸ் பாடசாலையின் வருடாந்த ஒளி விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய வருடாந்த ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை (22) பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற வருடாந்த ஒளி விழாவில், கல்லடி புதுமுகத்துவாரம் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குத் தந்தை வண. லோகநாதன் லோரன்ஸ், இஞ்ஞாசியார், ஆலய முன்னைநாள் பங்குத்தந்தை வண. யோசப்மேரி அடிகளார் ஆகியோர் ஆன்மீக அதிதி



களாகவும், வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களான உமா பரமேஸ்வரன் மற்றும் திருமதி புஸ்பராணி விஸ்வநாதன் ஆகியோர் அழைப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் இயேசு பிரானின் உயிர்ப்பை நினைவு கூரும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. அத்தோடு மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் அரங்கேறின.

இதன்போது நத்தார் கீதங்களும் இசைக்கப்பட்டன. நிகழ்ச்சிகளின் பங்கு பற்றிய மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர் கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# தாங்க முடியாத சோகத்தில் வடமராட்சி கிழக்கு மக்கள்!

**த.தனுசன்,**
2 ஆம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

வடமராட்சி கிழக்கு மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்ற இடமாக இருந்த போதிலும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரமாக மீன்பிடி காணப்பட்ட போதிலும் அங்குள்ள மக்களுக்கு அள்ளிக்கொடுத்து அரவணைக்கும் தாயாக விளங்கிய கடலானது 2004 ஆம் ஆண்டு உயிர்களை கொன்றொழித்து எமனாக மாறிய அந்த நிகழ்வை காலங்கள் பல சென்றாலும் பாதிக்கப்பட்ட மக்கள் மறக்க மாட்டார்கள்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 24 ஆண்டுகள் கடந்து சென்றிருந்தாலும் இறந்தவர்களின் நினைவுகளோடும் வலிகளோடும் கூடிய உள பாதிப்பிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள முடியாமலும் தான் இன்னமும் உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆண்டுகள் பல கடந்து போனாலும் அதன் பாதிப்புக்கள் இன்னும் ஏதோவொரு வழியில் தொடர்கிறது.

வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கடற்கரைகளுக்கு சென்றால் கட்டடங்கள் தரைமட்டங்களாகவும், இயற்கையில் செழித்திருந்த மரங்கள் தலை இல்லாமலும், பாலைவனங்கள் போன்றும் காட்சியளிக்கிறது.

சுனாமி அனர்த்தம் ஒருபுறம் யுத்த அழிவு மறுபுறம் என இரண்டு அழிவுகளும் ஏற்படுத்திய பாதிப்புக்கள் ஏராளம். அதுவரை காலமும் யுத்தத்தின் வடுக்களை சந்தித்த மக்களை இறுதியில் இயற்கை கூட விட்டு வைக்கவில்லை.

பல குடும்பங்கள் இல்லாமல் போனார்கள். குடும்பத்தில் பல உயிர்கள் இழக்கப்பட்டன. குழந்தைகள் முதல் முதியவர்வரை பலரையும் கொத்துக் கொத்தாகக் காவு வாங்கியது பேரலைகள்.

மக்களுக்கு வருமானத்தை ஈட்டிப் பொருளாதாரத்தையே உயர்த்திய கடல் அலை பல உயிர்களை கொன்றொழித்து அங்கவீனர்களாக்கி, பொருளாதார இழப்புக்களையும் சந்திக்க வைத்தது . அது மட்டுமல்லாமல் கடற்கரையோர கிராமங்களையே இல்லாமல் ஆக்கிய துயர நிகழ்வை - தமிழ் மக்களால் மறக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியது.

2004 மார்கழி 26 அன்று காலை அந்த சோக சம்பவம் இடம்பெற்றது.

இந்தோனேசியா சுமத்ரா தீவு அருகே ஆழ்கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, இலங்கை என பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தின.

இலங்கையின் கரையோர மாவட்டங்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புக்களை சந்தித்தன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு மாவட்டத்தின் கரையோரத்தின் சில பகுதிகள் பாதிப்பை சந்தித்தன.

தமிழர் பகுதிகளில் ஆழிப் பேரலையில் ஏற்பட்ட அழிவு என்பது நினைத்துப் பார்க்க முடியாத அளவு பேரழிவு. அதுவும் கரையோர மக்களின் பொருளாதாரத்தையும் அடியோடு ஆட்டம் காணச் செய்தது.

நீண்டகால யுத்தத்தைச் சந்தித்து 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் சமாதானம் நிலவிக் கொண்டிருந்த காலப் பகுதியில் தான் சுனாமி என்ற இயற்கை அனர்த்தம் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது. இன்று 24 ஆண்டுகள் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு உருண்டோடினாலும் சுனாமி ஏற்படுத்திய பாதிப்புக்களை வடமராட்சி கிழக்கு கடற்கரைக்கு சென்றால் அவதானிக்க முடியும். பிள்ளைகளை இழந்த பெற்றோரும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் உறவுகளை இழந்த சொந்தங்கள் என துயரங்களில் வாழும் அவல நிலை தொடர்கிறது.

சுனாமி அனர்த்தம் தொடர்பான அறிவை இனியுள்ள காலங்களில் பெற வேண்டும். முற்கூட்டிய எச்சரிக்கை பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். சுனாமியின் பின்னர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு உருவாக்கினாலும், இப்போது பெரும்பாலும் சுனாமி பற்றிய விடயங்கள் பெரும்பாலும் பேசப்படுவதில்லை. ஒவ்வோராண்டும் அஞ்சலிப்பதோடு எல்லாம் முடிந்து விடுகின்றன.

கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் நீர் உந்தப்பட்டு மிகப்பெரிய அலைகளாக உருவாகி கரையை தாக்கி சேதங்களை ஏற்படுத்துவதே சுனாமி என்கின்றோம். சுனாமி என்ற சொல் ஜப்பான் மொழியில் இருந்து வந்தது. இதனை தமிழர்கள் ஆழிப்பேரலை என குறிப்பிடுகின்றனர். சிறிய உயரமுடைய அலைகள் சுனாமியால் பெரிய அலைகளாக மாறுகின்றன. சுனாமி ஏற்படும் போது கடற்கரையில் அலையின் உயரம் நிலநடுக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும். கரையில் இருந்து அதன் உயரத்துக்கு ஏற்ப கடல்நீர்

தொடர்ச்சி ▼

# தாங்க முடியாத சோகத்தில் வடமராட்சி கிழக்கு மக்கள்!

தொடர்ச்சி▲

தரைப்பகுதியினுள் ஊடுருவும். பின் இப்பெரிய அலைகள் தரையில் பரவிய இடத்துக்குப் பின்னே தொடர்ந்து நீர் அலைகள் வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கும்.

சுனாமியின் அலைகளின் உயரத்துக்கு ஏற்ப அதனால் ஏற்படும் சேதங்களும் காணப்படும். சுனாமி அலைகளின் தாக்கத்துக்குப் பின் அந்த தரைப் பகுதியில் மாற்றங்கள் காணலாம். கடல் நீர் சுனாமி அலையின் மூலம் இடம் பெயர்ந்ததால் முன்னர் நிலப்பகுதியாக இருந்தவை நீராகவும் நீர்ப்பகுதியாக இருந்தவை நிலமாகவும் மாறுவதற்கு வாய்ப்புள்ளது.

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ் சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை "பிலோபபோனேசியப் போர் வரலாறு" என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர்தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும், பின்பு திடீர் என பின் வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என குறிப்பிட்டார்.

கி.பி. 365 இல் அலெக்சாந்திரியாவில் மிகப்பெரிய அழிவுக்கு பின்னர் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ், சுனாமி என்பது நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு அதைத் தொடர்ந்து ராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார்.

அதாவது நிலநடுக்கம் என்பது நிலப் பகுதியில் கடல் பகுதியில் மலைப் பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியில் உள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளாக உருவாகின்றது. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. ஆனால் கண்டங்களாக பிரிய, பிரிய அதன் தட்பவெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு நிலத்தட்டுகள் உருவாகின. இந்த தட்டுக்களின் மீது ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத்தான் "டெக்டானிக் பிளேட்கள்" என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி கி.மு. 365 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி கிழக்கு மத்திய தரைக் கடலில் தோன்றி எகிப்திய அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறுகிறார்கள்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை சுனாமி தொடர்பான அறிவை சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாடுகளிலிருந்து தெளிவான அறிவை 2004 ஆம் ஆண்டுக்கு முதலே பெற்றிருக்க வேண்டும். ஒரு அனர்த்தம் நிகழாது என கருதுவது மடமைத்தனம். எந்த அனர்த்தம் நிகழ முதலே அது தொடர்பான அறிவை பெற்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் போன்ற கருவிகளை முதலே பூட்டியிருந்தால் பல ஆயிரம் உயிர்களையும் பாதிப்புக்களையும் கூடியளவு தவிர்த்திருக்க முடியும். "வெள்ளம் வரும் முன் தான் அணை கட்ட வேண்டும்" என்பது போல் பாதிப்புக்கள் ஏற்பட முன் அது தொடர்பான அறிவூட்டலை பெற்றிருக்க வேண்டும்.

2004 சுனாமி ஏற்பட்ட நேரம் வடக்கு, கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்கள் விடுதலைப் புலிகள் வாழும் பகுதியாகவும் மிச்சப் பகுதி இலங்கை இராணுவத்திடமும் காணப்பட்டன.

இவ் சுனாமி அனர்த்தத்தால் இலங்கையின் கடற்கரையோர பிரதேசங்கள் அனைத்திலும் அதிக சேதம் ஏற்பட்டது.



2004 இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 230,000 மக்கள் உயிரிழந்தனர்.

சுமத்ரா பகுதியில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவதால் அங்கு சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். 2004 ஆம் ஆண்டில் மார்கழி 26 ஆம் நாளன்று யுரேஷியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாக கருதப்படும் பர்மா நிலத்தட்டும் இந்தோ–ஆஸ்ரேலியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாகிய இந்தியன் நிலத்தட்டும், இந்தோனேசியாவில் வடக்கே சுமந்திரா தீவில் கடலுக்கடியில் மோதியது. அதனால் ஏற்பட்ட பூகம்பத்தால் தோன்றிய அலைகள் தான் இந்திய பெருங்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது.

2004 ஆம் ஆண்டில் மிகப்பெரிய ஒரு இயற்கை அழிவு 2004 சுனாமி அனர்த்தத்தின் பின் இந்திய பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தமிழர் தாயகத்தில் சுனாமிக்கு பின்னரான விடுதலைப் புலிகளின் மீட்பு நடவடிக்கைகளை உலகின் பல பத்திரிகைகளும் பாராட்டி எழுதி இருந்தன.

பண்டைய காலத்தமிழர்கள் கடற்கரைகளில் கடல்சார் மரங்கள் உள்ளிட்ட இயற்கை பேரிடர் தடுப்புகளை பாதுகாப்பு அரணாக அமைத்து ஆழிப் பேரலைகளின் பாதிப்புக்களை குறைத்தார்கள்.

சங்ககால இலக்கியங்களில் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகிறது. எமது பிரதேச கடற்கரைகளில் கரையோரங்களில் வளரும் தாளை மரங்கள் போன்றவற்றை வைத்து இயற்கை அனர்த்தத்தின் வலிமையை குறைப்பதற்கான செயற்றிட்டங்கள் மிக குறைவென்றே கூறலாம்.

கடற்கரை பகுதிகள் பெரும்பாலும் மரங்கள் இல்லாமல் வெட்ட வெளியாக காணப்படுகிறது. ஒவ்வொரு பிரதேச ரீதியாக கவனத்தில் எடுத்து மரங்கள் வைக்கப்பட்டு அதை பராமரிக்க வேண்டும். இதனால் எதிர் காலத்தில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் பெருமளவான பாதிப்புக்களை குறைக்க வாய்ப்பாக இருக்கும்.

இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும். எமது நாட்டில் சுனாமி எச்சரிக்கை கோபுரத்திலிருந்து எச்சரிக்கை அலாரம் ஒலித்தவுடன் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு பிரதேச செயலகம், தன்னார்வ தொண்டர்கள், முப்படையின் பொலிஸ் ஒத்துழைப்புடன் கிரமமான முறையில் இடம்பெற வேண்டும். இதனால் மக்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்படுவார்கள்.

சுனாமியில் உயிர்நீத்த உறவுகளுக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயம் அமைத்து அவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள். அதேபோல் முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற நாட்டின் பல பகுதிகளின் உயிர்நீத்த உறவுகள் நினைவு கூறப்படுகின்றார்கள்.

# விஜய் பேசியதைப் பார்த்து பிரமித்துவிட்டேன்: எஸ்.ஏ.சி

மாநாட்டில் விஜய் பேசியதைப் பார்த்து பிரமித்துவிட்டேன் என்று அவரது தந்தை எஸ்.ஏ.சி தெரிவித்திருக்கிறார்.

ஒக்டோபர் 27 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநாடு நடைபெற்றது. இதில் விஜய்யின் பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. விஜய்யின் பேச்சு குறித்து அவரது தந்தை எஸ். ஏசி, கருத்து தெரிவிக்கையில்,

“மாநாட்டில் விஜய் கலக்கிவிட்டார். நான் இப்படி பேசுவார் என நினைக்கவே இல்லை. அரண்டு போய்விட்டேன்.



என் மகனின் வேகத்தை அன்று தான் பார்த்தேன். சினிமாவில் நடித்து பார்த்திருக்கிறேன். ஆனால், மேடையில் அப்படி பேசியதை பார்த்து பிரமித்துவிட்டேன். முதலில் அமைதியாக பார்த்துக் கொண்டே இருந்தேன். பின்பு என்னை அறியாமல் கைதட்ட ஆரம்பித்துவிட்டேன். மனதிற்குள் இருக்கும் வேகம், சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகம் என அனைத்தும் சேர்ந்து தான் அப்படி விஜய்யை பேச வைத்தது.” என்றார்.

விஜய்யின் பேச்சுப் பின்னணி குறித்து இப்போது வரை பலரும் கருத்து தெரிவித்து வருகிறார்கள். மேலும், விஜய் மாநாட்டுக்கு எப்படி இந்தளவுக்கு கூட்டம் கூடியது, எப்படி கூட்டி வந்தார்கள் என்பது குறித்து உளவுத்துறை விசாரணையில் இறங்கியியுள்ளது என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நடிகர் ரஜினிகாந்த் உடன் சீமான் திடீர் சந்திப்பு; தமிழக அரசியல் சூழல் குறித்து ஆலோசனை

போயஸ் கார்டனில் நடிகர் ரஜினிகாந்தை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள வீட்டில் நடிகர் ரஜினிகாந்தை மரியாதை நிமித்தமாக சந்தித்துள்ளார் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின் போது தமிழக அரசியல் களம் குறித்து இருவரும் பேசியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த நவம்பர் 2 ஆம் திகதியே ரஜினியை சந்திக்க சீமான் அனுமதி கேட்டிருந்தார் எனவும். ஆனால் பல்வேறு காரணங்களால் இந்த சந்திப்பு தள்ளிப் போனதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கி விக்கிரவாண்டியில் மாநாடு ஒன்றையும் நடத்தினார்.

அப்போது திராவிடமும், தமிழ் தேசியமும் இரண்டு கண்கள் என்று விஜய் கூறியதை சீமான் கடுமையாக



விமர்சித்தார். அதற்கு முன்பு விஜய்யை ஆதரித்து பேசி வந்த சீமான் அதன் பிறகு விமர்சனம் செய்தது சமூக வலைதளங்களில் விவாதமானது.

இதனைத் தொடர்ந்து விஜய் ரசிகர்களும் நாம் தமிழர் கட்சியினரும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து மாறி மாறி வார்த்தைகளால் தாக்கி கொண்டனர். இந்த சூழலில் சீமான் ரஜினியை நேரில் சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# கயானா, டோமினிகா, பார்படோஸ் சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு உயரிய விருது

பிரதமர் நரேந்திர மோடிக்கு கயானா, டோமினிகா, பார்படோஸ் நாடுகளின் உயரிய விருதுகள் நேற்று வழங்கப்பட்டன.

கரீபியன் பகுதி தீவுகளில் ஒன்றான கயானாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ பயணமாக சென்றார்.

அந்த நாட்டின் மக்கள் தொகை 8.14 லட்சம் ஆகும். இதில் தமிழர்கள் உட்பட இந்திய வம்சாவளியினர் 3.20 லட்சம் பேர் உள்ளனர். அதாவது கயானாவின் மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர். ஆவர். அந்த நாட்டின் தற்போதைய அதிபர் முகமது இர்ஃபான் அலி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். இவர் உத்தர பிரதேசத்தை பூர்விகமாகக் கொண்டவர்.

பிரதமர் நரேந்திர மோடி தனது



முதல்நாள் பயணத்தில் கயானா ஜனாதிபதி முகமதுவை சந்தித்து பேசினார். அப்போது இரு நாடுகளிடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

கயானாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக இரு நாடுகளிடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று கயானா இயற்கை வளத் துறை அமைச்சரும் இந்தியா வம்சாவளியை சேர்ந்தவருமான விக்ரம் பரத் தெரிவித்துள்ளார்.

கயானாவின் நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர நேற்று சிறப்பு உரையாற்றினார். அப்போது இந்தியாவுக்கும் கயானாவுக்கும் இடையே நெருங்கிய குடும்ப உறவு நீடிப்பதாக அவர் புகழாரம் சூட்டினார்.

கடந்த 1973 ஆம் ஆண்டில் கரீபியன் பகுதியை சேர்ந்த 15 நாடுகள் கரிகாம் என்ற பெயரில் கூட்டமைப்பை ஏற்படுத்தின. இந்த கூட்டமைப்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம் அதிகரித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்தியா– கரிகாம் கூட்டமைப்பு உச்சி மாநாடு கயானா தலைநகர் ஜார்ஜ்டவுனில் நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

உச்சி மாநாட்டின்போது கயானாவின் உயரிய விருதான ‘ஆர்டர் ஆப் எக்ஸலன்ஸ்’ பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

# சர்வதேச நீதிமன்ற பிடியாணை யூத வெறுப்பின் விளைவாகும்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு



தன் மீதான குற்றச்சாட்டுகளும், அதற்காக சர்வதேச நீதிமன்றம் விதித்துள்ள பிடியாணையும் யூத வெறுப்பின் விளைவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இஸ்ரேல் மீது போர்க்குற்ற புகார்கள் முன்வைக்கப்பட்டு சர்வதே குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில் தான் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டது. அவர் மட்டுமல்லாது இஸ்ரேல் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட், ஹமாஸ் தலைவர் ஆகியோருக்கும் பிடியாணை பிறப்பித்தது.

இந்நிலையில் இந்த பிடியாணை நித்து நெதன்யாகு எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்ட காணொலியில், “யூத வெறுப்புடன் எடுக்கப்பட்ட முடிவு. நவீன ட்ரேஃபஸ் விசாரணைக்கு சமமானது.” என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வடகொரியாவுக்கு ஒரு மில்லியன் பீப்பாய் எரிபொருள்களை வழங்கியது ரஷ்யா

2024 மார்ச் மாதம் முதல் வடகொரியாவிற்கு, ரஷ்யா ஒரு மில்லியன் பீப்பாய்களுக்கு மேல் எரிபொருளை வழங்கியுள்ளதாகப் பிரித்தானிய ஆய்வுக்குழு ஒன்று தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள் படங்களை ஆய்வு செய்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை தடைகளை விதித்துள்ள பின்னணியில், ரஷ்யா இவ்வாறு எரிபொருளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீண்டும் கைது

ஊழல் வழக்கில் பிணை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், போராட்ட வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அவர் இப்போதைக்கு விடுதலையாக வாய்ப்பில்லை என தெரிகிறது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது ஊழல் வழக்கு உட்பட ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

பாகிஸ்தான் தலைவர்களுக்கு வெளிநாட்டு தலைவர்கள் அளிக்கும் பரிசு எல்லாம் அரசு கருவூலத்துக்கு சென்று விடும். அவ்வாறு வழங்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றை, இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அரசு கருவூலத்துக்கு குறைந்த பணம் செலுத்தி முறைகேடான வழியில் எடுத்துக் கொண்டதாக ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் இம்ரான் கானுக்கு நேற்று முன்தினம் பிணை வழங்கியது.

இந்த பிணை கிடைத்த சில மணி நேரத்தில், தீவிரவாதம் மற்றும் இதர வழக்குகளில் இம்ரான் கானை ராவல்பிண்டி பொலிஸார் கைது செய்தனர்.





ராவல்பிண்டியில் உள்ள அடியலா சிறையில் இம்ரான் கான் இருந்தபோது, கடந்த செப்டம்பர் 28 ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார் என அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இம்ரான் கான் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். தீவிரவாத தடுப்பு சட்ட விதிமுறை மீறல், அரசு தடையை மீறி பொது இடத்தில் கூடுதல், பொலிஸாரை கடமையை செய்யவிடாமல் தடுத்தது, பொலிஸ் வாகனங்கள் மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தியது என பல குற்றச்சாட்டுகள் இந்த வழக்கில் இம்ரான் கான் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் இம்ரான் கைது செய்யப்படுவதற்கு முன்பே, பேட்டியளித்த பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர். கடந்த மே மாதம் நடைபெற்ற வன்முறை தொடர்பாக 8 வழக்குகள் இம்ரான் கான் மீது உள்ளன. இந்த வழக்குகளில் பிணை பெற்றால் மட்டுமே அவரால் வெளிவர முடியும் என கருத்து தெரிவித்திருந்தார்.

லாகூர், ராவல்பிண்டி மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய நகரங்களில் உள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களில் இம்ரான் கான் மீது 62 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பஞ்சாப் மாகாணத்தில் அவர் மீது 54 வழக்குகள் உள்ளன. அனைத்து வழக்குகளிலும் இருந்தும் இம்ரான் கானுக்கு பிணை வழங்க வேண்டும் என இம்ரான் கானின் சகோதரி நூரின் நியாசி தாக்கல் செய்த மனுவை லாகூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

இதனால் இம்ரான் கான் இப்போது விடுதலையாவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை என கூறப்படுகிறது. அவர் மீதான வழக்குகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என இம்ரான் கானின் பி.டி.ஐ. கட்சி தெரிவித்துள்ளது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 22/11/2024

## குற்ற செயல்களுடன் தொடர்பில் கனடாவில் தேடப்பட்டுவரும் நபர்

கனடாவின் காம்லூஸ் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை, பொலிஸார் தேடி வருகின்றனர் பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை இவ்வாறு பொலிஸார் 02




# பொருள்கள் சேவைகள் வரி விரைவில் நீக்கப்படும்

## கனடா அறிவிப்பு

**கனடாவில் தற்பொழுது அறவீடு செய்யப்பட்டு வரும் பொருள்கள் சேவைகள் வரி குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கு அளிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.**

**ஆளும் லிபரல் கட்சியும் என்.டி.பி கட்சியும் இது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.**

**இதன்படி எதிர்வரும் புத்தாண்டு, நத்தார் பண்டிகையை காலப்பகுதியில் கனடிய நுகர்வோருக்கு இந்த சலுகை வழங்கப்பட உள்ளது.**

சுமார் இரண்டு மாத காலத்திற்கு இவ்வாறு வரி சலுகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களினால் பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சில வகைப் பொருள்களுக்கு இந்த வரி விலக்கு அறிவிக்கப்பட உள்ளது.

பியர், வைன், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பல பொருள்களுக்கு இவ்வாறு வரிச் சலுகை வழங்கப்பட உள்ளது.

அரசாங்கத்தின் இந்த திட்டத்திற்கு ஆதரவளிக்கப்படும் என என்.டி.பி கட்சி தெரிவித்துள்ளது.

# ஒன்றாரியோவில் அதிகளவில் அபகரிக்கப்படும் வாகனங்கள்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கடந்த ஆண்டில் அதிகம் அபகரிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தகவல்களின் பிரகாரம் 2022 லெக்சஸ் ஆர்எக்ஸ் என்ற வாகனமே அதிக அளவில் அபகரிக்கப்பட்டுள்ளது.

கனடா முழுவதிலும் அதிக அளவில் அபகரிக்கப்பட்ட வாகனமாக 2022 டொயோட்டா ஹைலேண்ட் வாகனம் பட்டியலிடப்பட்ட பட்டுள்ளது.

ஒன்றாறியோ மாகாணத்தை பொறுத்தவரையில் இந்த வாகனம் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

ஹைலேண்டர் வாகனம் 02





# புலம்பெயர்ந்தோர்கள் தொடர்பில் கனேடியர் மனநிலையில் மாற்றம்

புலம்பெயர்ந்தோர் தொடர்பில் கனேடியர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை சமீபத்திய ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

முன்பெல்லாம் அரசியல்வாதிகள்தான் புலம்பெயர்தலுக்கு எதிராக கருத்துத் தெரிவித்துக்கொண்டே இருப்பார்கள். ஆனால், தற்போது கனேடிய மக்களின் எண்ணங்களும் புலம்பெயர்தலுக்கு எதிரானவையாக மாறிவருகின்றன.

Canadian Museum for Human Rights என்னும் அமைப்பு சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில், கனடாவுக்கு புதிதாக வருபவர்கள் மற்றும் அகதிகள் மீது அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும், புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு மிக அதிக சலுகைகள் வழங்கப்படுவதாகவும் கனேடியர்கள் கருதுவது தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 2,500 கனேடியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 2023இல், அகதிகளுக்கும் புகலிடக்கோரிகையாளர்களுக்கும் மிக அதிக அளவில் சலுகைகள் வழங்கப்படுவதாக 49 சதவிகித கனேடியர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்த ஆண்டில் அந்த எண்ணிக்கை 56 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், புலம்பெயர்தல் கனடாவை சிறந்ததாக்குகிறது என கருதும் கனேடியர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 52 சதவிகிதமாக இருந்தது, இந்த ஆண்டில் 44 சதவிகிதமாக குறைந்துள்ளது.

இந்நிலையில், சமீபத்தில் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட ஒரு காணொலியில், கிட்டத்தட்ட பிரச்சினைகளுக்கு புலம்பெயர்ந்தோர்தான் காரணம் என்பது போல பேசியிருந்தார்.

அந்த காணொலிக்கு புலம்பெயர்தல் ஆதரவு அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இப்படி தொடர்ச்சியாக அரசியல்வாதிகள் புலம்பெயர்தல் குறித்து விமர்சித்துக்கொண்டிருப்பதே கனேடிய மக்களிடம் புலம்பெயர்ந்தோர் குறித்து எதிர்மறையான எண்ணங்கள் உருவாகக் காரணம் என்றும் கூறியுள்ளன.

## குற்ற செயல்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடி வருகின்றனர்.

41 வயதான சார்ட் டக்லஸ் வெரி என்ற நபரை இவ்வாறு பொலிஸாரினால் தேடப்பட்டு வருகின்றார்.

மேற்படி நபர் 6 அடி 3 அங்குலம் உயரமுடையவர் எனவும் 230 பவுண்ட் எடையுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நபரை கண்டால் அவரின் அருகாமைக்கு செல்லாது பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.



## ஒன்றாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச அளவில் நல்ல கிராக்கி உள்ள வாகனம் என்பதனால், அந்த வாகனத்தை அதிக அளவு அபகரிப்பதற்கு கொள்ளையர்கள் முயற்சிக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத வாகன விற்பனையின் மூலம் தங்களுக்கு கிடைக்கக்கூடிய லாபத்தை அதிகரித்துக்கொள்ள கொள்ளையர்கள் முயற்சிக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒன்றாறியோ மாகாணத்தில் வாகன அபகரிப்பு சம்பவங்கள் 48.2 வீதத்தினால் அதிகரித்துள்ளன.




# பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் புயல் காற்று காரணமாக பலர் பாதிப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் புயல் காற்றின் சீற்றம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பம் என்ற புயல் காற்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் கரையோர பகுதிகளை தாக்கியுள்ளது.

இதன் காரணமாக மாகாணத்தின் அதிவேக நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் மின்சார வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில பகுதிகளில் மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் இந்த புயல் காற்று தாக்கியுள்ளது.

இந்த புயல் காற்றினால் ஏற்பட்ட சேத விபரங்கள் இன்னமும் மதிப்பீடு செய்யப்படவில்லை.

சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களது மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியாவின் மின்விநியோக நிறுவனம் தெரிவித்துள்ளது. மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு புயல் காற்றினால் தாக்கம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.





